Write up of Puthiya Thalaimurai Kalvi article (dt 9th Nov. 2015)
about our student achievers as "High fliers of Loyola 2015-16"

எம்.பார்த்தசாரதி

# கல்லூரிச் சாலை

**கல்லூரிகளில் கலக்கும் சாதனை மாணவர்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் புதிய பகுதி இது. இந்த வாரம் சென்னை லயோலா கல்லூரியின் சாதனை மாணவர்கள்...**



“ நுங்கம்பாக்கம் ஸ்டேஷன் பாருடா
அங்க இருக்கும் லயோலா காலேஜ் வந்து சேருடா
சீட்டு கெடக்க ரொம்பக் கஷ்டம்டா
மார்க் அதிகம் எடுத்தா உன்னோட இஷ்டம்டா
நுங்க நுங்க நுங்கம்பாக்கம்
உங்க அப்பா அம்மா கஷ்டப்பட்டு காலேஜ் சேக்கும்! ”

### சேதுகுமார்

இவரது கானா பாட்டு கேட்கிறவர்களை ஆட வைத்து விடும். அவரே கானா பாடல்களை எழுதிப் பாடி அசத்துகிறார். பி.ஏ. தமிழ் இரண்டாம் ஆண்டு மாணவரான இவரை 'கானா' சேது என்றால் கல்லூரியில் யாருக்கும் தெரியும். திரைப்பட இயக்குநராக வேண்டும் என்பது இவரது ஆசை.

### அபிஷேக் வர்மா

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், கல்லூரி கலாசார விழாக்கள் போன்றவற்றில் பங்கேற்று பரிசை தட்டிக்கொண்டு வரும் லயோலா கல்லூரியின் டிரீம் டீம் நடனக் குழுவைச் சேர்ந்தவர். பி.காம். மூன்றாம் ஆண்டு மாணவரான இவருக்கு நடனத்தில் ஆர்வம் அதிகம். அதற்காகவே இந்தக் கல்லூரியில் சேர்ந்திருக்கிறார்.





### மா.க. பாரதி

பி.காம். மாணவரான இவருக்கு தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் அதிகம். கல்லூரிக் கவிஞர். மேடைப் பேச்சாளர். பல்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பார்வையாளர்களை தனது பேச்சால் கைதட்ட வைக்கிறார்.




### நான்ஸி ஸ்வேதா

பி.காம். இரண்டாம் ஆண்டு மாணவி ஸ்வேதா, தடகள வீராங்கனை. ட்ரிபிள் ஜம்ப், லாங் ஜம்ப், ஹை ஜம்ப் ஆகிய தடகளப் பந்தயங்களில் தேசிய அளவிலும் மாநில அளவிலும் பதக்கங்களை வாங்கிக் குவித்தவர். தற்போது தேசிய அளவிலான போட்டிகளிலும் கலந்துகொண்டு வருகிறார். மாநில அளவில் சிறந்த தடகள வீராங்கனை விருதையும் சாம்பியன் பட்டத்தையும் வென்றவர். புதுச்சேரியில் உள்ள அரசுப் பள்ளிகளில் கழிப்பறை வசதியும், ஓய்வு அறையும் இலவசமாக அமைத்துக் கொடுக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

### அருள் ரோசாரியோ

பி.எஸ்சி. வேதியியல் இரண்டாம் ஆண்டு மாணவர். சிறு வயதிலிருந்தே ஓவியத்தில் ஆர்வம். புதுச்சேரியில் பள்ளியில் படிக்கும்போதே ஓவியப் போட்டிகளில் பரிசு பெற்றவர். ஓவியத் திறமைகளை கௌரவிக்கும் வகையில் இவருக்கு, கடந்த ஆண்டு பாலஸ்ரீ விருது கிடைத்தது. இவரது மூன்று ஓவியங்கள் இப்போது தில்லி நேஷனல் மியூசியத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதிலிருந்தே இவரது ஓவியத் திறமையைப் புரிந்துகொள்ளலாம். 3D ஓவியங்கள் இவரது ஸ்பெஷல்.





### குமரன்

பி.எஸ்சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் இரண்டாம் ஆண்டு மாணவரான இவர், டிரம்ஸ் வாசிப்பதில் சூரர். தனது 11 வயதில் 30 நிமிடங்கள் இடைவிடாமல் டிரம்ஸ் வாசித்து சாதனை படைத்த இவர், 17 வயதில் 50 மணிநேரம் தொடர்ந்து டிரம்ஸ் வாசித்து சாதனை படைத்ததோடு ஆசிய புக் ஆஃப் ரெக்கார்டிலும் இடம் பெற்றிருக்கிறார். ‘கதை திரைக்கதை வசனம்’ மற்றும் ‘புதியதோர் உலகம் செய்வோம்’ ஆகிய திரைப்படங்களின் இசையமைப்புக் குழுவில் பணிபுரிந்திருக்கிறார்.



### கரண் சுப்பிரமணியன்

லயோலா கல்லூரியில் அனிமேஷன் பட்டப் படிப்பில் இரண்டாம் ஆண்டு மாணவர். மாற்றுத்திறனாளி என்றாலும் கூட, கூடைப்பந்தாட்டத்தில் அசாத்திய திறமைசாலியான இவர் செஸ் விளையாட்டிலும் கில்லாடி. லாஸ் ஏஞ்சலிஸ் நகரில் நடைபெற்ற சர்வதேசக் கூடைப்பந்துப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர். தமிழில் வெளிவந்திருக்கும் 'இனம்' திரைப்படத்தின் கதாநாயகன். இந்தப் படத்தில் நடித்ததற்காக 'பிகைண்ட் உட்ஸ்' விருது பெற்றவர். 'துப்பாக்கி' பட இசை வெளியீட்டு விழாவுக்கு அழைக்கப்பட்டவர் இவர். அழைத்தவர் நடிகர் விஜய். லயோலா கல்லூரியின் முன்னாள் மாணவர் அவர்.

### ஜோ கிளிண்டன்

மூன்றாம் ஆண்டு விஸ்காம் மாணவர். 25 இசைக்கருவிகளை வாசிக்கும் திறமை கொண்டவர். கன்னட, தமிழ்த் திரைப்படங்களில் இசையமைப்புக் குழுவில் பணிபுரிந்திருக்கிறார். தற்போது மத்திய அரசின் இசை ஆல்பங்களைத் தயாரிப்பதில் பணிபுரிந்து வருபவர். தேசிய அளவில் நடைபெறும் இசையமைப்புப் போட்டிகளில் பங்கேற்று வருகிறார்.





### சித்தார்த் ஸ்ரீராம்

பி.காம். இரண்டாம் ஆண்டு மாணவர். ரஷ்யாவில் நடைபெற்ற என்.சி.சி. மாணவர் பயிற்சி முகாமில் தமிழ்நாட்டிலிருந்து பங்கேற்ற ஒரே மாணவர் இவர்தான். தில்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் கலந்துகொண்ட பெருமைக்குரிய மாணவர்.



### அருந்ததி

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த வளரும் பரதநாட்டியக் கலைஞர். பள்ளியில் படிக்கும் போதே நாட்டியத்திற்காக பல்வேறு போட்டிகளில் விருது பெற்றவர். தமிழ் திரைப்படங்களில் நடிகையாக வேண்டும் என்ற ஆர்வத்துடன் விஸ்காம் படிப்பில் சேர்ந்த இவர், குறும்படங்களில் நடித்து வருகிறார்.




''சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரி, தமிழகத்தின் பிரபல கலைக் கல்லூரி மட்டுமல்ல, அகில இந்திய அளவிலும் பிரசித்தமானது. 1925-இல் யேசு சபையினரால் 75 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட இந்தக் கல்லூரியில் தற்போது 7 ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள்" மாணவர்களுக்கு படிப்புடன் சமூக சிந்தனையையும் சேர்த்து வழங்குகிறோம்'' என்கிறார், கல்லூரி முதல்வர் அருட்தந்தை ஜோசப் அந்தோணிசாமி.

### ஹர்ஷன்

விஸ்காம் இரண்டாம் ஆண்டு மாணவர். கோவில்பட்டிக்காரரான இவர், கேமரா மீதுள்ள காதலால் விஸ்காம் படிக்க லயோலா கல்லூரி வந்தவர். ஃபேஷன், மாடலிங், புராடக்ட் போட்டோகிராபியில் அதிக ஈடுபாடு. பிரபல புகைப்படக் கலைஞர் நிதின் பரத்திடம் உதவியாளராக இருந்து தனது புகைப்படத் திறமையை வளர்த்து வருகிறார், வளர்ந்து வரும் இந்த புகைப்படக் கலைஞர்.





### சுமன்

விலங்கியல் துறையில் மூன்றாம் ஆண்டு மாணவரான இவர், குவிஸ் போட்டிகளில் தேசிய அளவில் விருதுகளையும் பரிசுகளையும் தொடர்ந்து அள்ளிக் குவித்து வருகிறார். குவிஸ் போட்டியில் பங்கேற்பதற்காக சக மாணவர்களுக்குப் பயிற்சியும் அளித்து வருகிறார் இந்தக் கொல்கத்தாவாசி.

படங்கள்: பால் தீமோத்தேயு

**கல்லூரிச் சாலையில் வாரந்தோறும் ஒரு கல்லூரி இடம் பெறும். நீங்களும் உங்கள் கல்லூரியில் உள்ள சாதனை மாணவர்களைப் பற்றி எங்களுக்குத் தெரிவிக்கலாம்.** feedback@puthiyathalaimurai.com